*பிரசார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை-4*

*11 09 2026 FRIDAY 7 15 AM*

*ஆகாஷ்வாணி - செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. இந்தியா-ஜெர்மனி இடையேயான வர்த்தக உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோதி கூறியுள்ளார்
2. ரஷ்யாவுடனான வர்த்தகம் நூறு பில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை எட்டும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
3. திரைப்படத்துறையில் இளம் படைப்பாளரக்ளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக தகவல், ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
4. காங்கோவில் உள்ள பள்ளி ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 26 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.
5. ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

------------

இந்தியா-ஜெர்மனி இடையேயான வர்த்தக உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று திரு. நரேந்திர மோதி கூறியுள்ளார்

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அந்நாட்டு பிரதமர் திரு. Friedrich Merz-வுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, தூய்மை எரிசக்தி, நவீன தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

------------

இந்தியா - ரஷ்யா இடையேயான இருதரப்பு வர்த்தகம், நூறு பில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை எட்டும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

புது தில்லியில், ரஷ்யத் தொழில்துறை அமைச்சர் திரு அன்டன் அலிகானோவுடன் இணைந்து நடைபெற்ற வர்த்தக ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், இவ்வாறு கூறினார்.

வரும் 2030-ம் ஆண்டிற்குள், இருதரப்பு முதலீடுகள் 50 பில்லியன் டாலர் என்ற இலக்கை எட்டும் வகையில், இரு நாடுகளின் பொருளாதார மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை விரைவுபடுத்த வேண்டும்என்று அவர் வலியுறுத்தினார்.

நீர்வாழ் உயிரினங்கள், காய்கறிகள், காபி, தேநீர், மசாலாப் பொருட்கள் உள்ளிட்ட அந்நாட்டிற்கான இந்தியாவின் ஏற்றுமதி கணிசமாக அளவில் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

மேம்பட்ட உற்பத்தி, எரிசக்தி, சுரங்கம், ரயில்வே மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் ஆகிய துறைகளில், முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மருந்துத் துறை, தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, சேவைகள், பொறியியல் மற்றும் ரயில்வே ஆகிய துறைகளில் இந்திய முதலீட்டை அதிகரிக்க ரஷ்யா உதவிட வேண்டும் என்று திரு பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.

------------

பிரிக்ஸ் உச்சிமாநாடு புதுதில்லியில் நாளை தொடங்குகிறது.

இரண்டு நாள் நடைபெறும் இம்மாநாட்டில் பிரேசில், ரஷ்யா, சீனா உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

இந்த உச்சிமாநாட்டில் புதிய கண்டுபிடிப்புகள், ஒத்துழைப்பு, நீடித்த வளர்ச்சி, சர்வதேச புவிசார் விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் திரு நரேந்திர மோடி, பல்வேறு உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் தனித்தனியே பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையொட்டி, புதுதில்லியில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

------------

செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங் போன்ற நவீன தொழில்நுட்பங்களின் வளர்ச்சி, நிதிசார் சேவைகளின் மேம்பாட்டிற்கு உதவிடும் என்று மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறினார்.

மும்பையில் நடைபெற்ற குளோபல் ஃபின்டெக் மாநாட்டில் பேசிய அவர், நாட்டின் நிதிசார் தொழிநுட்ப சேவைகள் விரைவான வளர்ச்சி கண்டு வருவதாகத் தெரிவித்தார்.

முன்னதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா மற்றும் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் தலைவர் திரு துஹின் காந்தா பாண்டே ஆகியோர் வங்கி மற்றும் நிதிச் சந்தைகளில், செயற்கை நுண்ணறிவு மற்றும் குவாண்டம் தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்தபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

------------

அரசின் திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவு செய்வதை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டுமென்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி ஆர் பாட்டில் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், நதிநீர் மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள தடைகளை கண்டறிந்து அவற்றிற்கு உடனுக்குடன் தீர்வுகாணப்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

நிலத்தடி நீர் மேலாண்மை, வெள்ளத்தடுப்பு, நீர் ஆதாரங்களை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று திரு சி ஆர் பாட்டில் வலியுறுத்தினார்.

------------

அரசின் ஆக்கப்பூர்வமான சீர்திருத்த நடவடிக்கைகள், திரைப்படத் தயாரிப்பாளர்களைத் திரைப்படத் திருட்டு போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க உதவிடும் என்று தகவல், ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் சர்வதேச திரைப்பட விழாவின் நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம், இருபது லட்சம் தொழில்முறை நிபுணர்களை உருவாக்கும் முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

2019-ம் ஆண்டில், காஷ்மீரில் திரைப்படப் படப்பிடிப்பு நடத்தவும், தயாரிக்கவும், திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு அழைப்பு விடுத்த பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையைச் செயல்படுத்தும் வகையில், இந்த திரைப்பட விழா அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இவ்விழாவை ஏற்பாடு செய்த ஜம்மு-காஷ்மீர் அரசிற்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

பின்னர், சிறப்புப் பிரிவில், 'தஸ்ருஃப்தார்' என்ற திரைப்படத்திகு சிறந்த திரைப்படத்திற்கான விருதையும் டாக்டர் எல் முருகன் வழங்கினார்.

------------

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில், சுற்றுலாத் துறை முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் சங்க மாநாட்டில் உரையாற்றிய அவர், சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்கானத் திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

தேசிய நெடுஞ்சாலைகள், ரயில்வே, விமானப் போக்குவரத்து என அனைத்து போக்குவரத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருவது, சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், உள்ளூர் கலாச்சாரத்துடன் விமான நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் நீண்டகாலம் தங்கும் வகையில், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் அதற்கான தொகுப்பை வடிவமைக்க வேண்டும் என்று திரு ராம் மோகன் நாயுடு கேட்டுக் கொண்டார்.

------------

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில், Sitakhand Ghat பகுதியில் நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். நான்கு பேர் காயமடைந்தனர்.

Nanded-Bhokar சாலையில் சென்று கொண்டிருந்த லாரி, வேன் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், இரண்டு பேர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

------------

காங்கோவில் உள்ள பள்ளி ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 26 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். 12-க்கும் அதிகமான மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

தெற்கு Bukavu நகரில் அமைந்துள்ள வீடுகளில் ஏற்பட்ட தீ படிப்படியாக அருகில் இருந்த பள்ளிகளுக்கும் பரவியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

------------

சத்தீஷ்கர், கடலோர ஆந்திர பிரதேசம், ஒடிசா ஆகிய இடங்களில், ஓரிரு பகுதிகளில் இன்று கனமழை முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப் பிரதேசம், அசாம், மேகாலயா, ஜார்க்கண்ட், கேரளம், மத்திய பிரதேசம், தெலங்கானா, உத்தராகண்ட், சிக்கிம், மேற்கு வங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில், ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

பீகார், ராஜஸ்தான், உத்திர பிரதேசம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் உள்ளிட்ட பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 40 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வென்று இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், முதலில் ஆடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 149 ரன் எடுத்தது.

இதனையடுத்து 150 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பங்களாதேஷ் அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 109 ரன் எடுத்தது.

-------------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மான்சி சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 23-21, 23-19 என்ற செட் கணக்கில், சீனாவின் Xu Wenjing-ஐ வென்றார்.

-------------

உலக பாரா துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா, ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

கொரியாவின் Chongwon-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில், 10-மீட்டர் ஏர் ரைபிள் ஸ்டாண்டிங் பிரிவில், மகளிர் குழுப் போட்டியில், இந்தியாவின் மோனா அகர்வால், அவனி லெகாரா மற்றும் மிலி ஷா ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் அணி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

ஆடவர் 10-மீட்டர் ஏர் ரைபிள் ஸ்டாண்டிங் பிரிவில், இந்தியாவின் Rakesh Nidagundi, Ananda Krishna, Swaroop Unhalkar ஆகியோர் அடங்கிய இந்திய அணி, வெள்ளிப்பதக்கம் வென்றது.

<<<<END>>>>